## வால்பாறையை சுற்றுலாத் தலமாக அறிவித்திடுக!

# தென்னை விவசாயிகள் அதிகம் - ரேஷன் கடைகளில் தேங்காய் எண்ணெய் விநியோகித்திடுக!

## சட்டப்பேரவையில் வால்பாறை ஆ.குட்டி என்கிற சுதாகர் பேச்சு!

**சென்னை, செப். 2–**

**சட்டப்பேரவையில் வால்பாறை தொகுதி கழக உறுப்பினர் ஆ. குட்டி என்கிற சுதாகர் பேசுகையில் வால்பாறையை சுற்றுலாத்தலமாக அறிவித்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.**

**சட்டப்பேரவையில் வால்பாறை ஆ.குட்டி என்கிற சுதாகர் பேசியதாவது:**

ஆ. குட்டி என்கிற சுதாகர்: பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதி மக்களின் குரலாக வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றத்தில் எனது அறிமுக உரையை நீண்ட நேரம் உரையாற்றுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு

இறைஎன்று வைக்கப்படும்.

நீதி நெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன் தான் மக்களுக்கான தலைவன் என அய்யன் வள்ளுவர் கூறியுள்ளார்.

வெண்தாடி வேந்தர் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரை வணங்குகிறேன். பெரியாரின் சீடனாய், அண்ணாவின் தம்பியாய், தமிழ் இனத்தின் காவலனாய், வங்கக் கடலோரத்தில் சந்தனப் பேழையில் வீற்றிருக்கும் எங்கள் இனத்தின் தலைவர் கலைஞர் அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வால்பாறை எஸ்டேட் பகுதியிலுள்ள என்னை 18 வயதில் மாணவரணி கிளைச் செயலாளராகவும், 20 வயதில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைக் கழகச் செயலாளராகவும், 22 வயதில் வார்டு கழகச் செயலாளராகவும், சுமார் 20 ஆண்டுகள் என்னை வால்பாறை நகர்மன்ற உறுப்பினராகவும், வால்பாறை திராவிட முன்னேற்றக் கழகத்தின் நகரக் கழகச் செயலாளராகவும் பணியாற்ற வாய்ப்புக் கொடுத்து, 58 நபர்கள் வாய்ப்பினைக் கோரியபோதும் இந்த எளியவனை தேர்ந்தெடுத்து, சட்டமன்ற உறுப்பினராக்கிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற இலட்சிய உள்ளம் கொண்ட மாணவனாய், தமிழ் பூத்த மலராய், தமிழனாய் காத்த தந்தை பெரியாரின் அவதாரமாய், தமிழே என் மூச்சு, தமிழ் இனமே என் பேச்சு, தமிழ்க்காக வாழ்வேன், வாழ்வேன் என வாழும் வள்ளுவர், 8 கோடி மக்களின் எழுச்சி நாயகனும், எங்கள் திராவிட மாடல் நாயகருமான திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு என் முதல் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

சிங்கத் தமிழனாய், சிரிக்கும் நாயகனாய், இன்றைய இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரமாய், எதிரிகளின் சிம்ம சொப்பனமாக விளங்கும், எதிர்க்கட்சித் தலைவராக எங்களை வழிநடத்தும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு என் மாண்பு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மரியாதைக்குரிய மேனாள் அமைச்சர் அருமை ஐயா திரு. நேரு அவர்களுக்கும், எங்களுக்கெல்லாம் நல்ல முறையில் பாடம் எடுக்கும் கொறடா, முன்னாள் அமைச்சர் மரியாதைக்குரிய ஐயா திரு.எ.வ. வேலு அவர்களுக்கும், முன்னாள் அமைச்சர் பெருமக்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் என் வால்பாறை மக்களின் சார்பாக வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு அனைத்து நேரங்களிலும் நல்ல ஆலோசனைகளைச் சொல்லி, என்னை ஊக்கப்படுத்திய கொங்கு மண்டலத்தின் சிங்கம், எங்கள் அன்பு அண்ணன் திரு. செந்தில்பாலாஜி அவர்களுக்கும், மாவட்டக் கழகச் செயலாளர் அருமை அண்ணன் திரு. தளபதி முருகேசன் அவர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர் அருமை அண்ணன் ஈஸ்வரசாமி அவர்களுக்கும், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், பேரூர் கழகச் செயலாளர்கள், உள்ளாட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், தோழமைக் கட்சி உறுப்பினர்களுக்கும், வால்பாறையின் குரலை சட்டமன்றத்தில் ஒலிக்கச் செய்த, வாக்களித்த மண்ணின் மைந்தர்கள் வால்பாறை கீழ்ப்பகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், வால்பாறை மேல்பகுதி வாக்காளப் பெருமக்களான எனது தேயிலைத் தோட்ட சொந்தங்கள் அனைவருக்கும், கல்லூரி முன்னாள் மாணவர்களுக்கும் இந்த நேரத்தில் நான் நன்றியைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். எனக்கு அரசியல் திருப்புமுனையைக் கொடுத்த எனது தகப்பனார் காலஞ்சென்ற ஆரோக்கியம் அவர்களை இந்தநேரத்தில் நான் வணங்குகிறேன். தொடர்ந்து என்னை ஊக்கப்படுத்தி வரும் எனது அருமைத் தாயார் திருமதி பழனியம்மாள் அவர்களுக்கும், எனது அன்பு மனைவி திருமதி உமாமகேஸ்வரி அவர்களுக்கும், எனது அன்பு மகன் ஆகாஷ் மற்றும் அக்ஷயா மற்றும் உற்றார், உறவினர்கள், எனது அன்பு தம்பிமார்கள், நண்பர்கள் அனைவருக்கும் இந்தநேரத்தில் நான் நன்றியை கூறிக்கொள்கிறேன்.

**கோவை மாவட்டத்திற்கு ரூ.20.000 கோடிக்கு திட்டங்கள்**

இன்று காலை பிற்படுத்தப்பட்ட துறையின் அமைச்சர், அன்புச் சகோதரர் அவர்கள் தென்னிந்தியாவின் மான்செஸ்டர் கோவை மாநகரை முதல் மாநகராக உள்ளது என்று பெருமையுடன் கூறினார். உண்மையிலே நாங்கள் பெருமைப்படுகிறோம். ஏனென்று கேட்டால், திராவிட மாடல் நாயகரின் ஆட்சியில் ஐந்தாண்டுகளில் கோவை மாவட்டத்திற்கு சுமார் 20,000 கோடிக்குமேல் வளர்ச்சித் திட்டங்கள் கொடுத்த அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

அன்றைய பொறுப்பு அமைச்சராக இருந்த அருமை அண்ணன் செந்தில் பாலாஜி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கும், மாவட்ட கழகச் செயலாளர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, செம்மொழிப் பூங்கா, பெரியார் நூலகம், தங்க நகைப் பூங்கா, ஹாக்கி மைதானம், ஜி.டி. நாயுடு மேம்பாலம், மேற்கு புறவழிச்சாலை, IT park போன்ற திட்டங்களெல்லாம் திராவிட மாடல் ஆட்சியில் நடைபெற்றது. அதுமட்டுமல்ல, விமான நிலைய விரிவாக்கத்திற்கு சுமார் 1500 கோடி ரூபாய் நிதியளித்தது திராவிட மாடல் ஆட்சி.

மலைகளின் இளவரசியாக, 7-வது சொர்க்கமாக திகழும் வால்பாறை நகரில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மகளிர் விடியல் பயணத் திட்டம் கொண்டுவரப்பட்டது. நீங்கள் கேட்டீர்கள், ஏன் எல்லாப் பகுதிக்கும் வந்தது தானே! புதியதாக என்ன கூறுகிறாய் என்று. அப்படி அல்ல. வால்பாறை பகுதி அனைத்தும் mofussil route-களாக இருந்தது. Town Bus-க்கு மட்டும்தான் விடியல் பயணத் திட்டம் கொண்டுவந்தோம். ஆனால், முன்னாள் அமைச்சர் திரு. V. செந்தில் பாலாஜி அவர்களிடம் நாங்கள் எடுத்துச்சொல்லி, அருமை அண்ணன் முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களிடம் எங்களை அழைத்துச்



சென்று, அப்போதைய தமிழக முதல்வர் அவர்கள் இல்லத்திற்கே சென்று வால்பாறை மற்றும் ஊட்டி பகுதிகளுக்கு ஒரு special G.O. பிறப்பித்து, அந்த mofussil route-ஐ விடியல் பயணத் திட்டமாக கொடுத்த அரசு, திராவிட மாடல் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

**வால்பாறையிலிருந்து சேலத்திற்கு பேருந்து வசதி!**

அதுமட்டுமல்ல, வால்பாறையிலிருந்து சேலம் பகுதிக்கு நேரடியாக பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுத்தார்கள். போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு அன்பான கோரிக்கை. வால்பாறை பகுதியிலிருந்து மதுரை மற்றும் திருச்சி பகுதிக்கு, ஏனென்றால், வெளியூரிலிருந்து பஞ்சம் பிழைக்க வந்த மக்கள்தான் அங்கு மூன்று, நான்கு தலைமுறைகளாக வசிக்கிறார்கள். அவர்கள் வெளியூர் செல்வதற்கு மதுரை மற்றும் திருச்சி பகுதிக்கு நேரடியாக செல்வதற்கு பேருந்து வசதி செய்துதர வேண்டுமென்று இந்தநேரத்தில் நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டங்களுக்கிடையேயான புறநகர்ப் பேருந்து போக்குவரத்துக்காக கிளாம்பாக்கத்தில் GST சாலையையொட்டி, சுமார் 88.52 ஏக்கர் பரப்பளவில் இந்தியாவிலே மிகப்பெரிய பேருந்து முனையமான ரூ.393.74 கோடி திட்ட மதிப்பீட்டில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் சென்னை பெருவளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்பட்டு, 30-12-2023 அன்று திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் அவர்களால் மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டது.

முந்தைய ஆட்சியில் கடந்த 2018 ஆம் ஆண்டு இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. கொரோனா போன்ற சூழ்நிலையால் 40 சதவிகிதம் பணிகள்தான் நடைபெற்றன. எஞ்சியுள்ள 60 சதவிகிதம் பணிகளோடு சேர்த்து, புதிய பணிகளான மழைநீர் கால்வாய் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுடன்கூடிய காலநிலை பூங்கா அமைத்து கிளாம்பாக்கம் இரயில் நிலையத்திற்கு ரூ.20 கோடி வழங்கியது. கிளாம்பாக்கம் இரயில் நிலையம் செல்வதற்கு நடைமேடை அமைப்பது உட்பட 26 பணிகள் போக்குவரத்துப் பயணிகளுக்காக, வசதிக்காக சுமார் ரூ.200 கோடியில் நீங்கள் அறிவித்த திட்டம். திராவிட மாடல் ஆட்சி தலைவராக எங்கள் முதலமைச்சர் அவர்கள் இருந்தபோது, 393 கோடி ரூபாய் செலவில் விமான நிலையத்திற்கு நிகராக அனைவரும் வியந்து பார்க்கும் வண்ணமாக கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம் மக்களுக்காக அளிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

*மலைகளின் இளவரசி வால்பாறை!*

மலைகளின் இளவரசியாகத் திகழும் வால்பாறை சட்டமன்றத் தொகுதியை நீங்கள் எடுத்துக்கொண்டால், அது வால்பாறை மேல் பகுதியாகவும், வால்பாறை கீழ் பகுதியாகவும் இரண்டு பகுதிகளாக உள்ளது. வால்பாறை மேல் பகுதியில் சுமார் 50,000 வாக்குகள், வால்பாறை கீழ் பகுதியில் சுமார் 1 இலட்சத்து 50 ஆயிரம் வாக்குகள் உள்ளன. வால்பாறையில் சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் தேயிலைத் தொழில்தான் மூலதன தொழிலாக இருந்து வருகிறது. இதில் மிக வருத்தப்படக்கூடிய செய்தி என்னவென்றால், அதிகாலை 7-00 மணிக்குத் தொழிலாளர்கள் அனைவரும் வேலைக்குச் செல்ல வேண்டும். கொழுந்து தாட்சட் என்று ஒன்று உள்ளது; காலையில் அதைக் கட்டிக்கொண்டு வேலைக்குச் சென்று அந்தத் தேயிலைச் செடியில் கை வைத்தார்கள் என்றால், அங்கு அவர்களை வரவேற்பது பாம்பாகத்தான் இருக்கும். ஐயோ பாம்பாயிற்றே என்று திரும்பி கீழே வந்தார்கள் என்றால், காலில் அட்டைப் பூச்சியாக இருக்கும், ஐயோ அட்டைப் பூச்சி என்று தெறித்து ஓடினார்கள் என்றால், இந்த side காட்டுமாடுகளின் தொல்லையாக இருக்கும். ஐயோ காட்டுமாடுகள் வந்துவிட்டதே என்று சொல்லி வேறு பக்கம் சென்றார்கள் என்றால், யானைகளின் தொல்லைகளாகத்தான் இருக்கும். இதுதான் எங்கள் வால்பாறை மக்களின் இன்றைய நிலை. பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கேட்பதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கேரளாவுக்கு இணையான சம்பளத்தை இந்த அரசு வழங்க முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**வால்பாறைக்கு கல்லூரி!**

2006 ஆம் ஆண்டு தன்மானத் தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் வால்பாறை பகுதி மக்கள் 12 ஆம் வகுப்பு படித்து முடித்துவிட்டு என்ன செய்வது என்று தெரியாமல் திக்கித் திசையாடித் திரிகின்ற வேளையிலே ஏழை மாணவர்கள் உயர்கல்வி பெற வேண்டும்; தேயிலைத் தோட்டத் தொழிலாளியின் மகன் இனி தேயிலைத் தோட்டத் தொழிலாளியாக இருக்கக் கூடாது என்கிற உயர்ந்த உள்ளத்துடன் அன்று எங்களுக்காக ஒரு கல்லூரியை வழங்கினார். அந்தக் கல்லூரியில் இன்று வரை சுமார் 12,500 மாணவர்கள் படித்துவிட்டு, கீழ் பகுதியில் வேலை செய்கிறார்கள். அந்தப் பகுதியிலுள்ள, கீழ் பகுதியில் வேலை செய்யும் குழந்தைகள் மறுபடியும் வால்பாறை பகுதிக்கு வந்து பணி செய்வதற்கு வசதியாக வால்பாறையில் ஒரு I.T. Park நிறுவித் தருமாறு உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் அன்பான ஒரு கோரிக்கையை வைக்கிறேன்; வால்பாறையில் அறிவியல் சார்ந்த படிப்புகள் இல்லை. ஆகவே, B.Sc. (Botany), B.Sc. (Zoology), B.Sc. (Chemistry), B.Sc. (Physics) போன்ற அறிவியல் சார்ந்த படிப்புகளை ஏற்படுத்தித் தருமாறு உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வெளியூர் சென்று வந்து பேருந்துகளை விட்டுவிட்டால், வால்பாறையிலேயே தங்கி அவர்கள் மறுநாள் estate பகுதிக்கு வேலைக்குச் செல்லும் விதமாக, கழக ஆட்சியில் சுமார் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் சிங்காரவேலர் இல்லம் அமைத்துக் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு. கடந்த திராவிட மாடல் ஆட்சியில் வால்பாறை மக்களுக்கு சுமார் 12 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 80 குடும்பங்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு வீடுகள் கட்டிக் கொடுத்தது, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு.

வால்பாறை வனத் துறை சார்ந்த பகுதி. தேயிலைத் தோட்டத் தொழில்கள்தான் மிகவும் அதிகமாக இருக்கின்றன. அந்தத் தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன் கருதி, அன்றைய திராவிட மாடல் அரசு புதிய அரசு மருத்துவமனையை சுமார் 9 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டிக் கொடுத்தது. மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களினுடைய அன்பான கவனத்திற்கு, மருத்துவமனைக்குத் தேவையான அதிநவீன மருத்துவ சாதனங்களை நீங்கள் கொடுத்து உதவ வேண்டும். ஏனென்று கேட்டீர்களென்றால், ஐயா, தயவுசெய்து மணியடிக்காதீர்கள். எனக்கு சாமி வந்துவிடும்.

நீங்கள் சத்தமாக நிறுத்திவிடுங்கள் என்று சொல்லுங்கள், நான் நிறுத்திவிடுகிறேன். Bell அடித்தால் எனக்கு சாமி வந்துவிடும். (குறுக்கீடு) உண்மையைத்தான் சொன்னேன். பாருங்கள், இப்போதே ஒரு மாதிரியாக இருக்கிறது.

மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு; வால்பாறையிலிருந்து கீழ்ப்பகுதி பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு 75 கிலோமீட்டர். 40 hairpin bends இருக்கின்றன. அது எங்களுக்கு மிகவும் critical. ஒரு patient கீழே வரவேண்டுமென்றால் மூன்று மணி நேரம் ஆகும். வால்பாறையில் கொஞ்சம் அதிநவீன கருவிகள் மற்றும் Ortho Doctors எங்களுக்கு வேண்டும். அதே போன்று, Paediatricians மிகவும் important. இதைத் தயவு செய்து நீங்கள் செய்து கொடுக்க வேண்டுமென அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாப்சிலிப் பகுதியில் கோழிகமுத்தியில் வனத்துறைமூலம், தொல்குடி திட்டம்மூலம், நீங்கள் பார்த்திருப்பீர்கள், பொம்மன் மற்றும் பெள்ளி என்ற வனத்துறையிலுள்ள இரண்டு யானைப் பாகன்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, சுமார் ரூ.15 கோடி செலவில் யானைப் பாகர்களுக்காக தமிழகத்தில் இல்லாதது, மற்ற மாநிலங்களிலும் இல்லாதது. யானைப் பாகன்கள் குடியிருக்க நவீனக் குடியிருப்புகள் திராவிட மாடல் ஆட்சியில் சுமார் ரூ.15 கோடி செலவில் டாப்சிலிப் பகுதியில் கட்டப்பட்டுள்ளன. மலைவாழ் மக்களுக்கு அரசின் சார்பாக முறையாகப் பட்டா வழங்கி அமைத்துக் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழகம். பல்நோக்கு சிறு தானிய மற்றும் மலைப் பயிர்கள் விற்கும் இடமாக அவர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

**உயர்கல்வி படிக்க வசதிகள்!**

உயர் கல்வி படிக்க வசதியான அனைத்து நலன்களையும் திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்து கொடுத்துள்ளது. குறிப்பாக, இது முக்கியமான விஷயம். வால்பாறை முழுவதும் estate பகுதி. பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் பாருங்கள்; உங்களைத்தான் பார்க்கிறேன். வால்பாறை முழுவதும் estate பகுதி. கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு நாம் பார்த்தோம் என்றால், சாலைகளே இருக்காது.

Tourism வந்தவர்களுக்கு எல்லாம் தெரியும். சாலைகளே இருக்காது. கடந்த ஆட்சியில் சுமார் ரூ.40 கோடி மதிப்பீட்டில் நகராட்சிமூலம் அனைத்து சாலைகளையும் தார்ச் சாலைகளாக மாற்றியமைத்துக் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு. அதுபோன்று, கீழ்ப்பகுதி ‘கம்மாளர் கூட்டுக் குடிநீர் திட்டம்’ ரூ.6 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. அங்கலக்குறிச்சி ஊராட்சி ரூ. 2 கோடி 85 இலட்சம் செலவில் திட்டங்கள் வகுத்துக் கொடுத்தது திராவிட மாடல் அரசு. வால்பாறை எம்.ஜி.ஆர். நகர், முடீஸ், சோலையாறு ஆகிய இடங்களில் ரூ. 1 கோடியே 12 இலட்சம் செலவில் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

பழங்குடியின மக்களின் நலன் கருதி ஆனைமலைப் பகுதியில் சேத்துமடையிலுள்ள சர்க்கார்பதி வரை சுமார் ரூ.3.5 கோடி செலவில் பழங்குடியின மக்களுக்காக புதிதாகச் சாலை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

வால்பாறையிலுள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளிகள் அனைவரும் திருநெல்வேலி, மதுரை, சேலம் போன்ற பகுதிகளிலிருந்து பிழைப்புக்காக வால்பாறை வந்தவர்கள். இரண்டு, மூன்று தலைமுறைகளாக அதே இடத்தில் வசிக்கின்றார்கள். ஐயா, எங்களுக்கு என்ன ஒரு பிரச்சினை என்றால், அவர்களுக்குச் சொந்த நிலம், வீடு போன்றவை இதுவரை இல்லை. அவர்கள் retired ஆகி போன பிறகு, 60 வயதில் retired ஆகி போன பிறகு கீழ்ப்பகுதியில் வீடு எதுவுமில்லை. அவர்கள் வாங்குகின்ற சம்பளம் சாப்பாட்டிற்கே சரியாக உள்ளது. அதில் பார்த்தீர்கள் என்றால் யானைத் தொல்லைகள், உண்மையாகச் சொல்கிறேன்; கடந்த 20 ஆண்டுகளில் இதுவரை 23 உயிர்கள், யானையாலும், சிறுத்தையாலும், காட்டு மாடுகளலாலும், அடிபட்டு, மிதிபட்டு அந்தக் கஷ்டத்தில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாங்கள் கேட்பதெல்லாம் இந்த அரசு ஒரு 3 சென்ட் இடம் கொடுத்து அந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை தயவு கூர்ந்து பெருக்கித் தருவீர்களா என்ற கேள்வியை இந்த நேரத்தில் வைக்க கடமைப்பட்டுள்ளேன். பிறகு, ஆனைமலைப் பகுதியிலுள்ள கீழ்ப்பகுதியில். . .

**அரசு மருத்துவமனை விரிவாக்கம்!**

அருள்மிகு மாசாணியம்மன் கோவில், நீங்கள் எல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள், மிளகாய் அரைத்துப் பூசி வழிபடுவது. உலகப் பிரசித்தி பெற்ற மாசாணியம்மன் கோவில், யாராவது தப்பு செய்தார்கள் என்றால் அங்கு மாட்டிக்கொள்வார்கள். அந்தக் கோவிலுக்கு மிகச் சிறப்பாகக் குடமுழுக்கு விழா நடத்தி இன்றுவரை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது திராவிட மாடல் அரசு.

இந்த நேரத்தில் அந்த அரசுக்கும், அந்த அமைச்சருக்கும் அன்புடன் நன்றியைக் கூற கடமைப்பட்டுள்ளேன். வேட்டைக்காரன் பகுதியில் அரசு மருத்துவமனை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. ஐயா, என்னுடைய கோரிக்கைகள் நிறைய இருக்கின்றன. இரண்டு மட்டும் சொல்லிவிடுகிறேன். மீதமுள்ளவற்றைக் கொடுத்துவிடுகிறேன். இரண்டு மட்டும் சொல்லிவிடுகிறேன். வால்பாறையை சுற்றுலாத் தலமாகத் தயவு கூர்ந்து நீங்கள் அறிவிக்க வேண்டும்; அறிவிப்பீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். ஏனெனில், சுமார் 1,500 வாகனங்கள் daily வந்து செல்கின்றன. எங்கள் பொறுப்பு அமைச்சர் இருக்கிறார், அவர்களுக்குத் தெரியும். Daily 1,500 வாகனங்கள், 1500-வுடன் 5-ஐ பெருக்கினால் daily பத்தாயிரம் நபர்களுக்கு மேல் வருகிறார்கள். ஏனெனில், கூடலூர், ஊட்டி, கோத்தகிரி, கொடைக்கானல் போன்ற பகுதிகளைவிட வால்பாறை மிகவும் அழகான ஊர்.

அமைதியான ஊர்; நல்ல மக்கள்; தங்கமான மக்கள். அதனால் அதிகமாக வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அதை சுற்றுலாத்தலமாக அறிவிக்க வேண்டும்.

**நியாயவிலைக் கடைகளில் தேங்காய் எண்ணெய்!**

வால்பாறை பகுதியில் தென்னை விவசாயிகள் அதிகமாக இருப்பதால், அவர்களின் நலன் கருதி, நியாய விலைக் கடைகளில் பாமாயிலுக்குப் பதிலாக தேங்காய் எண்ணெய்யை விநியோகித்தால், வியாபாரமும் பெருகும்; விவசாயிகளும் நன்றாக இருப்பார்கள்.

வால்பாறை பகுதியிலுள்ள 40 எஸ்டேட்டுகளில் செல்போன் டவர் இல்லை. இதனால், ஒரு யானை வந்துவிட்டால், யானை வந்துவிட்டது என்று பொது மக்களுக்குத் தெரிவிப்பதற்குத் தேவையான டவர் வசதிகூட இல்லை. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள், அந்த வசதியை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அங்கு டவர் இல்லாததால்தான் நான் சட்டமன்ற உறுப்பினராக முடிந்தது. உண்மை, உண்மைதான். டவர் இருந்திருந்தால் Instagram, Facebook எல்லாம் வந்திருக்கும். (சிரிப்பு) எங்கள் மக்கள் என்னை விடமாட்டார்கள். ஆனைமலைப் பகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தர வேண்டும்.

ஆனைமலைப் பகுதியில் மாசாணியம்மன் கோயில் மற்றும் சுற்றுலாத் தலமான டாப் ஸ்லிப் செல்லும் வழியில் railway crossing இருக்கிறது. அங்கு ஒரு மேம்பாலம் அமைத்துக்கொடுத்தால், எங்கள் மக்கள் traffic இல்லாமல் அந்தச் சுற்றுலாத்தலத்திற்குச் செல்ல இயலும்.

வால்பாறை பகுதியிலுள்ள பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகை, பழையகாலக் கட்டடமாக உள்ளது. அந்தக் கட்டடத்தைப் புதுப்பித்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மீதியுள்ள கோரிக்கைகளை இந்த அவையில் படித்ததாகப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நல்ல வாய்ப்பைக் கொடுத்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், என்னை இந்த இடத்தில் அமர்த்திய வால்பாறை தொகுதியிலுள்ள அனைத்து மக்களுக்கும், கழகத்தின் தலைவர் 8 கோடி மக்களின் எழுச்சி நாயகன் தளபதியார் அவர்களுக்கும் நன்றியைக் கூறி இப்பொழுது விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**தொகுதிக் கோரிக்கைகள்:**

வால்பாறை தொகுதி, ஆனைமலையில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு சுற்றுச் சுவர் மற்றும் பேவர் பிளாக் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். கோட்டூர் பேரூராட்சி பகுதியில் சின்னார்பதி தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைத்துத் தர வேண்டும்.

ஒடையகுளம், குப்புச்சிபுதூர் பகுதியில் 5 கி.மீ. நீளத்திற்கு வடிகால் அமைத்துத் தர வேண்டும். ஆனைமலை மாசாணியம்மன் கோயில் அருகே நவீனமயமான பேருந்து நிலைய வசதி செய்து தர வேண்டும்.

வால்பாறை தொகுதி, ஆனைமலை ஒடையகுளம் பகுதியில் அறிவொளி நகர் ஆதி திராவிடர் குடியிருப்பு மக்களுக்கு சமுதாயநலக் கூடம் அமைத்துத் தர வேண்டும். ஒடையகுளம் ராமச்சந்திராபுரத்தில் சமுதாய நலக் கூடம் அமைத்துத் தர வேண்டும்.

வால்பாறை பகுதியில் சுற்றுலா பயணிகள் வாகனங்கள் நிறுத்துவதற்கு வசதிகள் செய்து தர வேண்டும். வால்பாறை தொகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைத்துத் தர வேண்டும்.

வால்பாறை தொகுதி, பெத்தநாயக்கனூர் ஊராட்சியில், கெங்கம்பாளையம் பகுதியில் நியாய விலைக் கடை அமைத்துத் தர வேண்டும். வால்பாறை தொகுதியில் நடமாடும் ரேசன் கடை அமைத்துத் தர வேண்டும். வால்பாறை 9 செட்டில்மென்ட் பகுதியில் மலைவாழ் மக்கள் வாழும் பகுதியில் வனத் துறை சாலை வசதி செய்து தர வேண்டும்.

வால்பாறை பகுதியிலுள்ள சேடல்டேம் பகுதி மக்களுக்கு பட்டா வழங்கிட வேண்டும். வால்பாறை தொகுதி, ரேசன் கடைகளை கண்டெயினர் கடைகளாக மாற்ற வேண்டும்.

இவ்வாறு ஆ. குட்டி என்கிற சுதாகர் பேசினார்.

---


## விவசாயிகளை ஊக்குவிக்க திட்டங்களை அறிவிக்க வேண்டும்!

# குறைந்த நாட்கள் தண்ணீர் திறப்பது சாகுபடிக்கு உதவாது!

### ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம் !

சென்னை, செப்.2–

விவாசயிகளை ஊக்குவிக்க திட்டங்களை அறிவித்து விவசாயத்தை காப்பாற்ற வேண்டும். குறைந்த நாட்கள் தண்ணீர் திறப்பது சாகுபடிக்கு உதவாது என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறியுள்ளது.



தினகரன்

செப்டம்பர் 1, 2026 செவ்வாய்க்கிழமை

சாகுபடிக்கு உதவாது

மேட்டூர் அணையில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 12ம் தேதி காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். ஆனால், இந்தாண்டு காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்தும் கர்நாடகா அரசு, தண்ணீர் திறக்க மாட்டோம் என அடம் பிடித்து வருகிறது. இதனிடையே, கர்நாடக மாநிலத்தில் கடந்த சில வாரங்களாக பெய்து வரும் மழை காரணமாக அங்குள்ள கபினி மற்றும் கே.ஆர்.எஸ் அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் உபரி நீர் திறந்து விடுகிறது. இதனால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. அணையின் நீர்மட்டம் 90.47 அடியை எட்டியுள்ளது. அணைக்கு வினாடிக்கு 9 ஆயிரத்து 35 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. இதனிடையே, மேட்டூர் அணையில் இருந்து

இது குறித்து 1.9.2026 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:–

மேட்டூர் அணையில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 12ம் தேதி காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படு வது வழக்கம். ஆனால், இந்தாண்டு காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்தும் கர்நாடகா அரசு, தண்ணீர் திறக்க மாட்டோம் என அடம் பிடித்து வருகிறது. இதனிடையே, கர்நாடக மாநிலத்தில் கடந்த சில வாரங்களாக பெய்து வரும் மழை காரணமாக அங்குள்ள கபினி மற்றும் கே.ஆர்.எஸ் அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் உபரி நீர் திறந்து விடுகிறது. இதனால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. அணையின் நீர்மட்டம் 90.47 அடியை எட்டியுள்ளது. அணைக்கு வினாடிக்கு 9 ஆயிரத்து 35 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. இதனிடையே, மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீரை முதல்வர் விஜய் திறந்து வைத்துள்ளார்.

மேட்டூர் அணையில் இருந்து வழக்கமான நாளான ஜூன் 12ம் தேதிக்கு பதிலாக, இந்தாண்டு செப்டம்பர் 1 முதல் 45 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. குறைந்த கால அளவிலான தண்ணீர் திறப்பு குறித்து விவசாயிக ளிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. சம்பா சாகுபடிக்கு குறைந்தது 120 முதல் 135 நாட்கள் வரை தொடர்ந்து தண்ணீர் தேவைப்படும். ஆனால், தற்போதைய 45 நாள் தமிழக அரசின் அறிவிப்பு சம்பா சாகுபடிக்கு முழுமையாக உதவாது. டெல்டாவின் கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் சென்றடை யவே சுமார் 10 நாட்கள் வரை ஆகும். இதனால், தற்போதைய குறுகிய கால தண்ணீர் வீணாகாமல் இருக்க, செப்டம்பர் இரண்டாவது வாரத்தில் திறந்தால் வடகிழக்கு பருவமழை தொடங்கும் வரை பயிர்களை காப்பாற்ற ஏதுவாக இருக்கும்.

தமிழக அரசே குறைந்த நாட்களுக்கு மட்டும் தண்ணீர் திறப்பதாக அறிவிப்பது, எதிர்காலத்தில் காவிரி நீர் பங்கீட்டு வழக்குகளில் கர்நாடக அரசு தனக்கு சாதகமாக பயன்படுத்தி கொள்ள வழிவகுக்கும் என விவசாயிகள், எதிர்க்கட்சிகள் கவலை தெரிவித்துள்ளனர். மேட்டூர் அணையில் நீர் இருப்பும், வரத்தும் குறைவாக உள்ளது. அணையை திறந்துவிட்டு, பெயரளவுக்கு குறைவாக தண்ணீர் விடுவதால், சாகுபடிக்கு பயன் தராது. எனவே, நீர்மட்டம் 100 அடியை எட்டிய பிறகு தண்ணீர் திறக்க வேண்டும். அதுவரை திறக்கக்கூடாது என விவசாய சங்கங்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தும் பயன் இல்லை. தண்ணீர் பற்றாக்குறை உள்ள நிலையில் சிஆர் 1009 விதை நெல் ரகம் சிறந்தது. ஆனால், அந்த ரகம் இல்லை என அதிகாரிகள் கூறுகின்றனர்.

குறுவைக்கு காவிரி நீர் வராததால் வருவாய் கிராம அளவில் 75 சதவீதம் சாகுபடி செய்யாமல் காப்பீடுக்கான பிரீமியம் செலுத்திய விவசாயி களுக்கு இழப்பீடு கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நேரடி விதைப்பு செய்வதற்கு உழவு மானியம் கொடுத்தால், விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். மேலும், சம்பா தொகுப்பு திட்டத்தையும் அறிவிக்க வேண்டும். அப்போது தான் விவசாயிகள் சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டுவார்கள். தற்போது அரிசி உள்பட தானியங்கள் விலை விண்ணை முட்டும் அளவுக்கு எகிறி கிடக்கிறது. வரும் காலங்களில் இன்னும் அதிகரிக்கும். எனவே விவசாயிகளை அரசு ஊக்குவிக்கும் திட்டங்களை அறிவித்து விவசாயத்தை காப்பாற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தான் பொதுமக்களிடம் அதிகரித்துள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### திரு.வி.க. நகர் வடக்குப் பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தனின் தாயார்

# செ.முருகம்மாள் முதலாமாண்டு நினைவேந்தல்!

## கழக நிர்வாகிகள் அஞ்சலி!

சென்னை, செப். 2 -

சென்னை, வியாசர்பாடி, எம்.எம்.கார்டன் எண் 81-ல் வசித்த கழக முன்னோடி நினைவில் வாழும் அ. செல்லப்பன் அவர்களின் துணைவியாரும், திரு.வி.க. நகர் வடக்குப் பகுதிச் செயலாளர் செ. தமிழ்வேந்தனின் தாயாருமான செ. முருகம்மாள் அவர்களின் முதலா



மாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி இன்று (2.9.2026- புதன்கிழமை), மாலையும் நாளை (3.9.2026 - வியாழக்கிழமை) காலை 10 மணி முதல் பகல் 12 மணி வரையிலும் வியாசர்பாடி, எம்.எம்.கார்டனில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறுகிறது. இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள், தோழர்கள், உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொண்டு அன்னாரது திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்துகின்றனர்.